## திருப்புவனம் இளைஞர் மரணம்:

# “பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இந்த அரசு ஆறுதலாக நிற்கும்”!

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் – பாதிக்கப்பட்டவரின் இல்லத்திற்கு நேரில் சென்றார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ஆறுதல்!





சென்னை, ஜூலை.2-

திருப்புவனத்தில் காவலர்கள் தாக்கி உயிரிழந்த இளைஞர் அஜீத்குமார் குடும்பத்தினரை, நேற்று மாலை, முதல்வரின் அறிவுரையேற்று, அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்போது அலைபேசி வாயிலாக முதல்வரும் - இளைஞர் அஜீத்குமாரின் தாயார் மற்றும் சகோதரருக்கு ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வையடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இந்த அரசு ஆறுதலாக நிற்கும்” என்று உறுதியளித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் மடப்புரத்தில் காவலர்கள் தாக்கி உயிரிழந்த இளைஞர் அஜித்குமார் குடும்பத்தினரை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், அஜித்குமாரின் தாயார் மாலதி, சகோதரர் நவீன் ஆகியோரைச் சந்தித்து ஆறுதல் கூறினார். அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனுடன் மாவட்ட ஆட்சியரும் உடன் சென்றிருந்தார்.

அப்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனின் அலைபேசி வாயிலாக, இறந்த அஜீத்குமாரின் தாயார் மற்றும் சகோதரரைத் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வுக்குக் காரணமானவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அவர்களிடம் எடுத்துரைத்த முதல்வர் அவர்கள், “உங்களுக்கு உரிய உதவிகள் அனைத்தையும் அமைச்சர் பெரியகருப்பன் செய்து கொடுப்பார்” என உறுதியளித்தார்.

இதனையடுத்து - முதல்வர் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**“திருப்புவனம் இளைஞருக்கு நடந்த கொடுமை யாருக்கும் நடக்கக் கூடாதது, யாராலும் நியாயப்படுத்த முடியாத தவறு! கடமை தவறிக் குற்றம் இழைத்தவர்களுக்கு நிச்சயம் இந்த அரசு தண்டனை பெற்றுத் தரும்! பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலாக நிற்கும்!”**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமை! – துணை மேயர் மு.மகேஷ்குமார் முன்னிலையில்

# சைதை மேற்குப் பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் துரைமுருகன் – ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, ஜூலை 2-

கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாநில இளைஞர் அணி செயலாளர் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு விளக்கப் மாபெரும் பொதுக்கூட்டம்! சைதை மேற்கு பகுதி கழக செயலாரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் தலைமை செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் முன்னிலையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, களக்காடி எல்லப்பன், மின்னல்கந்தப்பன் ஆகியோர் வரவேற்பில் 02.07.2025 (புதன்கிழமை) மாலை 5 மணியளவில் சைதாப்பேட்டை தேரடி திடலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ச. அரவிந்தரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு மாநில கழக நிர்வாகிகள் க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., கவிஞர் காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் க.விஸ்வநாதன் எம்.சி., மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கர் எம்.சி., வாசுகிபாண்டியன், தா.மோகன்குமார் எம்.சி., எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு. இராசா எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி., சு. சேகர், துரைகபிலன், நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், அய்யம்பாக்கம் அ.ம.துரைவீரமணி, மாநில துணை செயலாளர்கள் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ரத்னாலோகேஸ்வரன்,

மேடவாக்கம் ப.ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், எஸ்.ஹரிகிருஷ்ணன், ரா.பாலசுந்தரம், அடையார் பி.ஜே.பாஸ்கர், ராமாபுரம் வ.செல்வகுமார், த.பஷீர், வீர.கனிமொழி, மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ. பாஸ்கரன், ப.அருண்குமார், வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி., சி.பரிமேலழகர், கழக த.ரமேஷ், கொட்டிவாக்கம் ம.பார்த்தீபன், சி.சுரேஷ், எம்.ஆர்.சசிகுமார், குமரேசன், ராமாபுரம் வி.ராஜேஷ், கனிமொழி தனசேகரன், நிஷாசையத், தரமணி ஜெகதீசன், டாக்டர் அனிஷ், முகேஷ்கண்ணன், வி.ஜெயச்சந்திரன், எஸ்.பி.அருள்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், எம். விநாயகமூர்த்தி, ச.சங்கர்கணேஷ் எம்.சி., ஜெ.இ.பாண்டியன், கா.வீ. தியாகராஜன், செ.ரவி, சைதை மேற்கு - கிழக்கு பகுதி நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், அ.வரதன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.பாபு, த.மணி, ஆர். எல்.காந்தன், டி.வி.நரசிம்மன், வே.முருகன், எஸ். சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், இரா. சுதாபிரியன், ந.பாபு, மு. மகேஷ், கே.எம்.எஸ்.கணேசன், ஜி.செல்வராஜ், வே. ரமேஷ்குமார், ஏ.மஜித், உள்ளிட்ட கழக முன்னோடிகள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தின் நிறைவாக 142அ வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம், 142வது வட்ட கழக செயலாளர் எம்.நாகா, ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள்

## தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் – துணை ஒருங்கிணைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு

திருவள்ளூர்,ஜூலை.2-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் துணை ஒருங்கிணைப்பாளர்கள் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று 02072025 மாலை 4 மணியளவில் திருவள்ளூர் ரயில் நிலையத்தில் நடைபெறும் பொதுக்கூட்டம் மேடை அருகில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையில் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு தமிழர் வாழ் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர். டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ. சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர். வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, எம்,மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்

எனவே ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட தொகுதி ஒன்றிய நகர பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் துணை ஒருங்கிணைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மண் மொழி மானம் காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் “ஓரணியில் தமிழ்நாடு” ஆன்லைன் உறுப்பினர் சேர்க்கை குறித்து என மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றியம் திமுக இளைஞரணி சார்பில் புச்சிரெட்டிபள்ளி ஊராட்சியில் தெருமுனை கூட்டம் ஒன்றிய செயலாளர் என். கிருஷ்ணன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. கலந்துகொண்டு திராவிட மாடல் ஆட்சி நான்காண்டு சாதனை குறித்து சிறப்புரையாற்றினார் உடன் தலைமை கழக பேச்சாளர் ஆரணி மாலா, வி. கோதண்டன், அசூர் மாணிக்கம், நரசிம்ம ராஜ், ஏகாம்பரம், பிரவீன், விஜய், சுந்தர், டில்லி பாபு, ஹரிபாபு, எம். ஆர். குப்புசாமி, பூபாலன், சீனிவாசன், கோவேந்தன், ராமு, சுப்பிரமணி, ராஜேந்திரன், பாலாஜி, கேசவன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





வேலூர் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாலாஜா – ராணிப்பேட்டையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.




## தி.மு.க. இளைஞர் அணி

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 05.07.2025 | தோவாளை வடக்கு ஒன்றியம் | காட்டுப்புதூர் | செ.தாமோதரன், ஆ.விஜயராஜா |
| 2 | 06.07.2025 | ரீத்தாபுரம் பேரூர் | ரீத்தாபுரம் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஜெ.ஜெபின் |
| 3 | 08.07.2025 | தோவாளை கிழக்கு ஒன்றியம் | தோவாளை சந்திப்பு | செ.செல்வகுமார், ஏ.ஏஞ்சலின் |
| 4 | 09.07.2025 | பூதப்பாண்டி பேரூர் | பேருந்து நிலையம் | சி.அன்பழகன், ஆ.விஜயராஜா |
| 5 | 13.07.2025 | கன்னியாகுமரி நகரம் | கன்னியாகுமரி ரவுண்டானா, அண்ணா சிலை முன்பு. | சி.அன்பழகன் ஏ.ஏஞ்சலின் |
| 6 | 14.07.2025 | வில்லுக்குறி பேரூர் | வில்லுக்குறி சந்திப்பு | செ.செல்வகுமார், ஏ.ஏஞ்சலின் |
| 7 | 16.07.2025 | வால்வச்சகோஷ்டம் பேரூர் | பள்ளியாடி | ஜஸ்டின் வில்பிரட், ஜெ.ஜெபின் |
| 8 | 18.07.2025 | கணபதிபுரம் பேரூர் | கணபதிபுரம் | ஜஸ்டின் வில்பிரட், ஆ.விஜயராஜா |
| 9 | 19.07.2025 | திங்கள் நகர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், திங்கள் நகர். | எஸ்.கே.ரஹ்மான் ஏ.ஏஞ்சலின் |
| 10 | 20.07.2025 | குளச்சல் நகரம் | காமராஜர் பேருந்து நிலையம் அருகில் | செ.செல்வகணபதி ஆ.விஜயராஜா |
| 11 | 20.07.2025 | நாகர்கோவில் மாநகரம் கிழக்குப் பகுதி | ரயிலடி திடல் | எஸ்.கே.ரஹ்மான் ஜெ.ஜெபின் |
| 12 | 21.07.2025 | தாமரைக்குளம் பேரூர் | தாமரைக்குளம் | ஜஸ்டின் வில்பிரட், ஜெ.ஜெபின் |
| 13 | 22.07.2025 | மருங்கூர் பேரூர் | ராஜாவூர் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஆ.விஜயராஜா |
| 14 | 23.07.2025 | முளகுமூடு பேரூர் | முளகுமூடு | ஜஸ்டின் வில்பிரட், ஜெ.ஜெபின் |
| 15 | 24.07.2025 | அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | மகாராஜபுரம் | எஸ்.கே.ரஹ்மான் ஏ.ஏஞ்சலின் |
| 16 | 25.07.2025 | மயிலாடி பேரூர் | மயிலாடி சந்திப்பு | எஸ்.கே.ரஹ்மான் ஆ.விஜயராஜா |
| 17 | 26.07.2025 | நெய்யூர் பேரூர் | பெத்தேல்புரம் | எஸ்.கே.ரஹ்மான் செ.நா.நதிஷா |
| 18 | 27.07.2025 | கல்லுக்கூட்டம் பேரூர் | உடையார்விளை சந்திப்பு | செ.தாமோதரன், ஜெ.ஜெபின் |
| 19 | 28.07.2025 | அகஸ்தீஸ்வரம் பேரூர் | அகஸ்தீஸ்வரம் | சி.அன்பழகன், ஜெ.ஜெபின் |
| 20 | 29.07.2025 | குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | வெள்ளி சந்தை | செ.செல்வகுமார் ஏ.ஏஞ்சலின் |
| 21 | 29.07.2025 | இரணியல் பேரூர் | இரணியல் | செ.செல்வகணபதி, ஆ.விஜயராஜா |
| 22 | 02.08.2025 | தக்கலை தெற்கு ஒன்றியம் | கண்டன்விளை | ஜஸ்டின் வில்பிரட் செ.நா.நதிஷா |
| 23 | 03.08.2025 | நாகர்கோவில் மாநகரம் தெற்குப் பகுதி | என்.ஜி.ஒ. குடியிருப்பு சந்திப்பு | சி.அன்பழகன் ஆ.விஜயராஜா |
| 24 | 05.08.2025 | தேரூர் பேரூர் | தேரூர் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஏ.ஏஞ்சலின் |
| 25 | 06.08.2025 | ராஜாக்காமங்கலம் வடக்கு ஒன்றியம் | ராஜாக்காமங்கலம் சந்திப்பு | செ.செல்வகுமார் ஏ.ஏஞ்சலின் |
| 26 | 08.08.2025 | புத்தளம் பேரூர் | புத்தளம் | ஜஸ்டின் வில்பிரட் ஆ.விஜயராஜா |
| 27 | 09.08.2025 | வெள்ளிலை பேரூர் | வெள்ளி மலை | ஜஸ்டின் வில்பிரட் செ.நா.நதிஷா |
| 28 | 10.08.2025 | ராஜாக்காமங்கலம் தெற்கு ஒன்றியம் | ஈத்தாமொழி சந்திப்பு | சி.அன்பழகன் ஆ.விஜயராஜா |
| 29 | 11.08.2025 | மணவாளக்குறிச்சி பேரூர் | மணவாளக்குறிச்சி | செ.செல்வகணபதி, ஜெ.ஜெபின் |
| 30 | 12.08.2025 | அழகிய பாண்டியபுரம் பேரூர் | பெருந்தலைக்காடு | சி.அன்பழகன், ஆ.விஜயராஜா |
| 31 | 13.08.2025 | அழகப்பபுரம் பேரூர் | அழகப்பபுரம் சந்திப்பு | செல்வ கணபதி, ஆ.விஜயராஜா |
| 32 | 14.08.2025 | குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | கட்டிமாங்கோடு | செ.செல்வகுமார் ஜெ.ஜெபின் |
| 33 | 16.08.2025 | அஞ்சு கிராமம் பேரூர் | அஞ்சு கிராமம் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஜெ.ஜெபின் |
| 34 | 17.08.2025 | சுசீந்திரம் பேரூர் | சுசீந்திரம் ரத வீதி | எஸ்.கே.ரஹ்மான் செ.நா.நதிஷா |
| 35 | 17.08.2025 | அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | இரவி புதூர் | சி.அன்பழகன் ஆ.விஜயராஜா |
| 36 | 18.08.2025 | ஆரல்வாய்மொழி பேரூர் | மருத்துவர் நகர் | எஸ்.கே.ரஹ்மான் ஆ.விஜயராஜா |
| 37 | 18.08.2025 | கொட்டாரம் பேரூர் | கொட்டாரம் | செ.தாமோதரன், ஏ.ஏஞ்சலின் |
| 38 | 24.08.2025 | கப்பியரை பேரூர் | செல்லக்கோணம் | செ.தாமோதரன், செ.நா.நதிஷா |
| 39 | 26.08.2025 | நாகர்கோவில் மாநகரம் மேற்குப் பகுதி | அரசு மருத்துவக் கல்லூரி பின்புறம், ஆசாரிப்பள்ளம். | செ.செல்வகுமார் ஏ.ஏஞ்சலின் |
| 40 | 30.08.2025 | தாழக்குடி பேரூர் | தாழக்குடி | செ.செல்வகுமார், ஆ.விஜயராஜா |
| 41 | 31.08.2025 | நாகர்கோவில் மாநகரம் வடக்குப் பகுதி | கிருஷ்ணன்கோவில் | சி.அன்பழகன் செ.நா.நதிஷா |
| 42 | 01.09.2025 | மண்டைக்காடு பேரூர் | மண்டைக்காடு | செ.செல்வகணபதி, ஆ.விஜயராஜா |

கன்னியாகுமரி

நாள் : 01.07.2025

கலைஞர் 100 1924 - 2023

